# இயல்சாத்து

பொய்கைமுனிபூதத்தார்பேயாழ்வார் தண்
பொருநல்வருங்குருகேசன்விட்டுசித்தன் *
துய்யகுலசேகரன்நம்பாணநாதன்
தொண்டரடிப்போடிமழிசைவந்தசோதி *
வையமெலாம்மறைவிளங்கவாள்வேலேந்தும்
மங்கையர்கோனென்றிவர்கள்மகிழ்ந்துபாடும் *
செய்யதமிழ்மாலைகள்நாம்தெளியவோதித்
தெளியாதமறைநிலங்கள்தெளிகின்றோமே. *

இன்பத்திலிறைஞ்சுதலிலிசையும்பேற்றில்
இகழாதபல்லுறவிலிராகமாற்றில் *
தன்பற்றில்வினைவிலக்கில் தகவோக்கத்தில்
தத்துவத்தையுணர்த்துதலில்தன்மையாக்கில் *
அன்பர்க்கேயவதரிக்குமாயனிற்க
அருமறைகள்தமிழ்செய்தாந்தாளேகொண்டு *
துன்பற்றமதுரகவிதோன்றக்காட்டும்
தொல்வழியேநல்வழிகள்துணிவார்கட்கே.

என்னுயிர்தந்தளித்தவரைச்சரணம்புக்கி
யானடைவேஅவர்குருக்கள்நிரைவணங்கிப் *
பின்னருளால்பெரும்பூதூர்வந்தவள்ளல்
பெரியநம்பிஆளவந்தார்மணக்கால்நம்பி *
நன்னெறியையவர்க்குரைத்தஉயக்கொண்டார்
நாதமுனிசடகோபஞ்சேனைநாதன்
இன்னமுதத்திருமகளென்றிவரைமுன்னிட்டு
எம்பெருமாந்திருவடிகளடைகின்றேனே.

ஆரணநூல்வழிச்செவ்வை யழித்திடுமைதுகர்க்கு *
ஓர் வாரணமாய்அவர் வாதக்கதலிகள்மாய்த்தபிரான் *
ஏரணிகீர்த்தி இராமானுசமுனியின்னுரைசேர் *
சீரணிசிந்தையினோம் சிந்தியோமினித்தீவினையே.

நீளவந்தின்றும்விதிவகையால் நினைவொன்றியநாம் *
மீளவந்தின்னும்வினையுடம்பொன்றி விழுந்துழலாது *
ஆளவந்தாரெனவென்று அருள்தந்தும்விளங்கியசீர் *
ஆளவந்தாரடியோம் படியோமினிஅல்வழக்கே.

காளம்வலம்புரியன்ன நற்காதலடியவர்க்குத் *
தாளம்வழங்கித் தமிழ்மறைஇன்னிசைதந்தவள்ளல் *
மூளுந்தவநெறிமூட்டிய நாதமுனிகழலே *
நாளுந்தொழுதொழுவோம் நமக்கார்நிகர்நானிலத்தே.

ஆளுமடைக்கலமென்றெம்மை அம்புயத்தாள்கணவன் *
தாளிணைசேர்ந்து எமக்குமவைதந்ததகவுடையார் *
மூளுமிருட்கள்விள்ள முயன்றேதியமுன்றினுள்ளம் *
நாளுமுகக்கவிங்கே நமக்கோர்விதிவாய்க்கின்றதே.

திருவுடன்வந்தசெழுமணிபோல் திருமாலிதயம் *
மருவிடமென்னமலரடிசூடும் வகைபெறுநாம் *
கருவுடன்வந்தகடுவினையாற்றில் விழுந்துழலாது *
அருவுடன்ஐந்தறிவார் அருள்செய்யஅமைந்தனரே.

விண்ணவவேண்டி விலக்கின்றிமேவும்அடிமையெல்லம் *
மண்ணுலகத்தில் மகிழ்ந்தடைகின்றனர் *
வண்துவரைக் கண்ணனடைக்கலம்கொள்ளக் கடன்கள்கழற்றிய *
நம் பண்ணமருந் தமிழ்வேதமறிந்தபகவர்க்களே.

## வாழித்திருநாமம்

ஸர்வதேச தசாகாலேஷ்வ் அவ்யாஹத பராக்ரம
ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்.

ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா
திகந்தவ்யா பிநீபூயாத் ஸாஹிலோக ஹிதைஷிணீ

ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஶ்ரியமநுபத்ரவாம் அநுதிநம்ஸம்வர்த்தய
ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஶ்ரியமநுபத்ரவாம் அநுதிநம்ஸம்வர்த்தய.

நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார்த்த ப்ரதாயிநே
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே.

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஸிகம்.

வாழி இராமாநுசப்பிள்ளான் மாதகவால்,
வாழும் அணிநிகமாந்தகுரு,--வாழியவன்
மாறன் மறையும் இராமாநுசன் பாஷியமும்,
தேறும் படியுரைக்கும் சீர்.

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே,
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே,
கஞ்சத் திருமங்கை உகக்கவந்தோன் வாழியே,
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே,
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே,
திருமலைமால் திருமணிமாய்ச் சிறக்கவந்தோன் வாழியே,
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே,
செந்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே.

நானிலமும் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ,
மாநகரின் மாறன் மறைவாழ,--ஞானியர்கள்
சென்னியணி சேர் தூப்பூல் வேதாந்த தேசிகனே!
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

வாழியணி தூப்புல் வருநிகமாந் தாசிரியன்
வாழியவன் பாதாரவிந்தமலர்--வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்.

திருநாள்பாட்டு

வாதாசனவரிவரெனவருமாபாஷியம்வகைபெறுநாள்
வகுளாபரணப்பெருமாள்தமிழின்வாசியறிந்திடுநாள்
பேதாபேதம்பிரமமெனுவகைபிரமந்தெளிவித்திடுநாள்
பேச்சொன்றுக்குச்சததூஷணியைப்பேசியதேசிகநாள்
தீதாகியபலமாயக்களைகளைச்சிக்கெனவென்றிடுநாள்
திக்கெட்டும்புகழ்ஸ்ரீபாஷியத்தைத்தெளியவுரைத்திடுநாள்
ஓதாதோதும்வேதாந்தாரியனுதயஞ்செய்திடுநாள்
உத்தமமானபுரட்டாசித்திருவோணமெனுந்நாளே.

செங்கமலத்தயனன்வைரென்றுபுகழ்ந்துமகிழ்ந்திடுநாள்
சீர்கொளிராஜனுசவெனுமந்திரம்பதிகளில்வாழ்ந்திடுநாள்
செங்கயல்வாளைகள்சேர்வயல்சூழ்ந்தவரங்கர்சிறந்திடுநாள்
சிந்துரவெற்பிடைச்சென்றுதிகழ்ந்தசிரீபதிவாழ்ந்திடுநாள்
தெங்கொடுமாங்கனிதேசிகஞ்சுனைவேங்கடத்தீசர்ப்பிறந்திடுநாள்
சீர்மதியாமமௌலிதந்தேசிகர்ப்பிறந்துவளர்ந்திடுநாள்
பங்கயமாமலர்மங்கைகுணங்களைத்தெளியவெளியிடுநாள்
பார்திகழ்பாத்திரபதத்திருவோணமெனுந்திருநன்னாளே.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்